05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

KEHIDUPAN MASYARAKAT INDIA DI LADANG DALAM SAJAK MODEN TAMIL KARYA N. PATCHAIBALAN

ந. பச்சைபாலன் புதுக்கவிதைகளில் இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கை

THILAGAM A/P PALANISAMY

திலகம் த/பெ பழனிசாமி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம்

2019

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

KEHIDUPAN MASYARAKAT INDIA DI LADANG DALAM SAJAK MODEN TAMIL KARYA N. PATCHAIBALAN

THILAGAM A/P PALANISAMY

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) (MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2019

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

Sila tanda (√)

Kertas Projek	
Sarjana Penyelidikan	√
Sarjana Penyelidikan dan Kerja Kursus	
Doktor Falsafah	

INSTITUT PENGAJIAN SISWAZAH

PERAKUAN KEASLIAN PENULISAN

Perakuan ini telah dibuat pada ...7.....(hari bulan).....10......... (bulan) 20.19...

i. Perakuan pelajar :

Saya, THILAGAM A/P PALANISAMY M20122001805 FBK (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk KEHIDUPAN MASYARAKAT INDIA DI LADANG DALAM SAJAK MODEN TAMIL KARYA N. PATCHAIBALAN.

adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya

Tandatangan pelajar

ii. Perakuan Penyelia:

Saya, DR. SAMIKKANU JABAMONEY A/L ISHAK SAMUEL (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk KEHIDUPAN MASYARAKAT INDIA DI LADANG DALAM SAJAK MODEN TAMIL KARYA N. PATCHAIBALAN

(TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) (SLA NYATAKAN NAMA IJAZAH).

18/11/2019
Tarikh

Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

INSTITUT PENGAJIAN SISWAZAH /
INSTITUTE OF GRADUATE STUDIES

BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK
DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM

Tajuk / *Title*: KEHIDUPAN MASYARAKAT INDIA DI LADANG DALAM SAJAK MODEN TAMIL KARYA N. PATCHAIBALAN

No. Matrik /*Matric No.*: M20122001805

Saya / *I* : THILAGAM A/P PALANISAMY

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris

2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   The Library has the right to make copies of the thesis for academic exchange.

4. Sila tandakan (√) bagi pilihan kategori di bawah / *Please tick (√) from the categories below:-*

☐ **SULIT/*CONFIDENTIAL*** — Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972*

☐ **TERHAD/*RESTRICTED*** — Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.*

☑ **TIDAK TERHAD / *OPEN ACCESS***

Thilagam
____
(Tandatangan Pelajar/ Signature)

____
(Tandatangan Penyelia / *Signature of Supervisor*) & (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: 18/11/2019

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the related authority/organization mentioning the period of confidentiality and reasons for the said confidentiality or restriction.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமர்ப்பணம்

அன்பு தாயாருக்கு...

நினைவில் வாழும் பாசமான தந்தைக்கு...

நெஞ்சார்ந்த கணவருக்கு...

பிரியமான மகனுக்கு...

நேசமான உடன்பிறப்புகளுக்கு...

மற்றும் மேதகு நட்புகளுக்கு...

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நன்றியுரை

நமச்சிவாய வாழ்க நாதந்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதாந்தாள் வாழ்க.

முதுகலைப் பட்டத்திற்கான இவ்வாய்வுப் பணி இனிதே நிறைவேற திருவருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவன் திருவடியைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். பல அன்பு நெஞ்சங்களின் இனிய ஒத்துழைப்பால்தான் இவ்வாய்வு செம்மையாக உருப்பெற்றது. அந்த அன்பு பெருந்தகையோர் அனைவருக்கும் என் நன்றி என்றும் உரியது. அவ்வகையில் இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு ஊக்கமளித்து வழிகாட்டிய சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக விரிவுரையாளரும் என்னுடைய நெறியாளருமாகிய முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமின்றி, இந்த ஆய்வை மேற்கொள்ள எல்லா வகையிலும் எனக்கு பக்கபலமாகவும் தூண்டுகோலாகவும் இருந்த என் கணவர் திரு. வேணுகோபால் சின்னையா அவர்களுக்கும், என் தாயார் திருமதி கண்ணம்மா வைத்திலிங்கம் அவர்களுக்கும் மற்றும் என் உடன்பிறப்புகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தெரியாதவற்றைக் கேட்கும் பொழுது, அதை எனக்கு புரியும் வண்ணம் விளக்கமளித்துத் தெளிவுப்படுத்திய என் சக நண்பர்களுக்கும் மற்றும் இவ்வாய்வைச் சிறப்பாகச் செய்து முடித்திட ஊக்கமளித்த திரு. வைகுந்தன் தயாளன் அவர்களுக்கும் இவ்வேளையில் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, இவ்வாய்வுவை மேற்கொள்ள உதவிய கவிஞர் ந.பச்சைபாலன் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வுச் சாரம்

இவ்வாய்வு ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் வெளிப்படும் மலேசிய இந்தியத் தோட்டப்புறப்புறத் தொழிலாளர்களின் வாழ்க்கைமுறையை அடையாங் காணுதல், தோட்டப்புறத் தொழிலாளர்களின் வாழ்வியல் மற்றும் வறுமை நிலையைச் சாடுவதற்கான காரணங்களை விவரித்தல் மற்றும் புதுக்கவிதைகளில் காணப்படும் பாத்திரப்படைப்புகளின் வழி தோட்டப்புற இந்தியர்களின் வாழ்வியல் முறைகளைப் பகுத்தாய்தல் ஆகும். பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தி நூலக ஆய்வு மற்றும் சமூகவியல் கோட்பாடு பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் வழி, மலேசிய இந்தியத் தோட்டப்புறத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட இன்னல்களையும் அவலங்களையும் சமுதாயம், பொருளாதாரம், அரசியல் என்ற அடிப்படையில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கு 50 புதுக்கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில், 30 புதுக்கவிதைகள் சமூகப் பிரச்சனைகளையும் நான்கு புதுக்கவிதைகள் பொருளாதாரப் பிரச்சனைகளையும் இரண்டு அரசியல் பிரச்சனைகளையும் மற்றும் 14 புதுக்கவிதைகள் சமுதாய எதிர்ப்புகளையும் விளக்குகின்றது. இந்தியத் தோட்டப்புறத் தொழிலாளர்களின் வாழ்க்கைமுறையை அப்பா, அம்மா, தமிழாசிரியர் மற்றும் எழுத்தாளர் பாத்திரப்படைப்புகளின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் வறுமையில் வாடிய போதும், மலேசிய நாட்டின் முன்னேற்றத்திலும் மேம்பாட்டிலும் இவர்களின் உழைப்பு மிக அளப்பரியது என்பதில் எவ்வித ஐயமில்லை. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளின் வழி, மலேசியத் தோட்டப்புற இந்தியர்கள் வாழ்க்கைமுறையை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பாக அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

KEHIDUPAN MASYARAKAT INDIA DI LADANG DALAM SAJAK MODEN TAMIL KARYA N. PACHAIBALAN

ABSTRAK

Kajian ini bertujuan mengenal pasti corak kehidupan masyarakat India ladang, menghuraikan protes sosial terhadap kesengsaraan masyarakat India ladang dan menganalisis corak kehidupan masyarakat India ladang berdasarkan watak dan perwatakan dalam sajak moden N. Pachaibalan. Kajian ini adalah sebuah kajian kepustakaan dan kaedah analisis kandungan serta menggunakan teori sosiologi. Pola perbincangan kajian ini bertumpu kepada masalah sosial, ekonomi dan politik. Dapatan kajian menunjukkan daripada 50 buah sajak moden yang dikaji, 30 buah sajak moden menggambarkan isu sosial, empat buah sajak moden menggambarkan isu ekonomi, dua buah sajak moden menggambarkan isu politik. Baki sebanyak 14 buah sajak moden menggambarkan isu protes sosial. Corak kehidupan masyarakat India ladang digambarkan melalui watak bapa, ibu, guru dan pengarang. Kesimpulannya, kehidupan masyarakat India ladang digambarkan dalam keadaan kemiskinan dan berkorban demi pembangunan negara. Implikasinya, gambaran kehidupan masyarakat India ladang dalam sajak-sajak N. Pachaibalan dapat digunakan untuk meningkatkan taraf kehidupan masyarakat India ladang di Malaysia.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

THE LIFE OF THE INDIAN COMMUNITY IN ESTATES IN TAMIL MODERN POETRY BY N. PACHAIBALAN

ABSTRACT

This research is to identity the social life of the Indian community in estates. It talks about the protests and suffering met by the Indian community. The analysis is based on the characters found in the modern poems by the poet N. Patchaibalan. This research is based on the books and the analysis of the content using sociology theory. The discussion is orientated to the social, economic and political problems. Among the 50 poems that were selected for research, 30 poems dwindle with social issues, four about economy and two of political issues. The balance 14 poems deals with the social protests of the Indian community. The life styles of the estate Indian communities sufferings were exposed using the characters such as father, mother, Tamil teacher and the poet himself in the poems. As a conclusion, the Indian communities have been living in poverty and yet sacrifices made for the country. As an implication, the poet N. Patchaibalan’s poems could be used a guidance to uplift the stains of the Indian estate workers.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

KANDUNGAN

Muka Surat

PERAKUAN KEASLIAN PENULISAN	ii
PENGESAHAN PENYERAHAN TESIS	iii
சமர்ப்பணம்	iv
நன்றியுரை	v
ஆய்வுச் சாரம்	vi
ABSTRAK	vii
ABSTRACT	viii
KANDUNGAN	ix
அட்டவணைப் பட்டியல்	xiii
வரைப்படப் பட்டியல்	xiv

இயல் 1 அறிமுகம்

1.1	முன்னுரை	1
1.2	ஆய்வுப் பின்னணி	3
1.3	படைப்பாளர் அறிமுகம்	7
1.4	ஆய்வுச் சிக்கல்	11
1.5	ஆய்வு நோக்கம்	14
1.6	ஆய்வு வினா	14
1.7	ஆய்வு நன்மை	15
1.8	ஆய்வு எல்லை	16
1.9	ஆய்வுச் சான்றாதாரம்	16

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.1 முதன்மைச் சான்றாதாரம் 17

1.9.2 துணைமைச் சான்றாதாரம் 17

1.10 கலைச்சொல் விளக்கம் 17

1.10.1 புதுக்கவிதை 18

1.10.2 மலேசிய இந்தியர்கள் 19

1.10.3 தோட்டப்புறம் 20

1.11 தொகுப்புரை 21

இயல் 2 முந்தைய ஆய்வுகள்

2.1 முன்னுரை 22

2.2 உள்நாட்டு ஆய்வுகள் 23

2.3 வெளிநாட்டு ஆய்வுகள் 44

2.4 தொகுப்புரை 50

இயல் 3 ஆய்வு நெறிமுறை

3.1 முன்னுரை 51

3.2 ஆய்வு வடிவமைப்பு 52

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 53

3.4 ஆய்வு அணுகுமுறை 54

3.4.1 விளக்கமுறை ஆய்வு 54

3.4.2 நூலக ஆய்வு 55

3.4.3 நேர்காணல் 56

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.5 தரவு சேகரிப்பு முறை 56

3.5.1 தரவுகளை வாசித்தல் 57

3.5.2 தரவு தேர்ந்தெடுத்தல் 57

3.5.3 தரவு பகுத்தாய்தல் 58

3.6 ஆய்வுக் கோட்பாடு 58

3.7 கோட்பாடு வடிவமைப்பு 64

3.8 தொகுப்புரை 64

இயல் 4 ஆய்வு முடிவு

4.1 முன்னுரை 65

4.2 சமுதாயம் 66

4.2.1 இந்தியாவிலிருந்து மலாயாவிற்கு வந்த இந்தியர்களின் வரலாறு 68

4.2.2 தோட்டப்புற இந்தியர்களின் வாழ்க்கை முறை 83

4.2.3 தோட்டப்புறத் தொழிலாளர்களின் அடிப்படை வசதி 100

4.2.4 மதுப்பழக்கம் 105

4.2.5 வன்முறை 112

4.3 கல்வி 118

4.3.1 மொழியுணர்வின்மை 119

4.3.2 தமிழ்ப்பள்ளி 127

4.3.2.1 சுதந்திரத்திற்கு முன் தமிழ்ப்பள்ளிகள் 129

4.3.2.2 சுதந்திரத்திற்குப் பின் தமிழ்ப்பள்ளிகளின் நிலை 132

4.4 பொருளாதாரம் 149

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.1 மலேசிய இந்தியத் தோட்டப்புற மக்களின் வறுமை நிலை 149

4.4.2 மாதச் சம்பளம் 155

4.5 அரசியல் 167

4.5.1 தேர்தல் வாக்குறுதி 169

4.6 ந.பச்சைபாலனின் பாத்திரப்படைப்புகளின் வழி தோட்டப்புற தொழிலாளிகளின் வாழ்வியல் 180

4.6.1 தந்தை பாத்திரப்படைப்பு 181

4.6.2 தாய் பாத்திரப்படைப்பு 197

4.6.3 தமிழ் ஆசிரியர் பாத்திரப்படைப்பு 203

4.6.4 கவிஞரின் தோட்டப்புற வாழ்க்கை அனுபவங்கள் 211

4.6.5 கவிஞரின் ஆதங்கங்கள் 222

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 5 முடிவுரை

5.0 முன்னுரை 234

5.1 கண்டுபிடிப்புகள் 235

5.2 எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரை 251

5.3 தொகுப்புரை 252

துணை நூற்பட்டியல் 255

பின்னிணைப்பு

1. நேர்காணல் 262

2. RINGKASAN EKSKULISIF 275

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணைப் பட்டியல்

எண் **பக்கம்**

4.1 மலாயாவிற்கு இந்தியர்களின் வருகை தொடர்பான கவிதைப் பட்டியல் 69

4.2 1881-1935ஆம் ஆண்டு வரை மலாயாவுக்கு வந்து சென்ற இந்தியர்களின் விபரங்கள் 74

4.3 1911-1957 வரையில் மலாயாவில் வாழ்ந்த சமூக இனவாரியான இந்தியர்கள் 75

4.4 1877-1940ஆம் ஆண்டு வரை தோட்டங்களில் இரப்பர் நடபட்ட நிலத்தின் பரப்பளவு 81

4.5 இந்தியர்களின் வாழ்க்கை முறை தொடர்பான கவிதைப் பட்டியல் 85

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.6 அடிப்படை வசதி தொடர்பான கவிதைப் பட்டியல் 103

4.7 மதுப்பழக்கம் தொடர்பான கவிதைப் பட்டியல் 107

4.8 வன்முறை தொடர்பான கவிதைப் பட்டியல் 112

4.9 மொழியுணர்வின்மை தொடர்பான கவிதைப் பட்டியல் 121

4.10 *மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை* 134

4.11 *தமிழ்ப் பள்ளிகளின் அமைவிட வகைப்பாடு* 136

4.12 தமிழ்ப்பள்ளி தொடர்பான கவிதைப் பட்டியல் 137

4.13 *மலேசியத் தோட்டப்புறத் தொழிலாளிகளில் ஏழ்மையில் வாழ்பவர்களின் வறுமை நிலை* 150

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.14 தோட்டப்புறத் தொழிலாளர்களின் வறுமை நிலை தொடர்பான கவிதைப் பட்டியல் 151

4.15 இந்திய தொழிலாளர்களுக்கான மாதாந்திர செலவு பட்ஜெட் (1925) 156

4.16 1875 முதல் 1941 வரை தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட நாள் சம்பளம் 157

4.17 தோட்டப்புறத் தொழிலாளர்களின் மாதச் சம்பளம் தொடர்பான கவிதைப் பட்டியல் 158

4.18 *மாபாவில் அங்கம் வகிக்கும் தோட்டங்களில் பால்மரம் வெட்டும் மற்றும் வெளிகாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நாள் ஒன்றுக்கான அடிப்படைச் சம்பளம்* 1968-1999. 163

4.19 தேர்தல் வாக்குறுதி தொடர்பான கவிதைப் பட்டியல் 167

4.20 தந்தை பாத்திரப்படைப்புத் தொடர்பான கவிதைப் பட்டியல் 182

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.21 தாய் பாத்திரப்படைப்புத் தொடர்பான கவிதைப் பட்டியல் 197

4.22 தமிழ்ப்பள்ளி ஆசிரியர் பாத்திரப்படைப்புத் தொடர்பான கவிதைப் பட்டியல் 203

4.23 கவிஞரின் தோட்டப்புற வாழ்க்கை அனுபவங்கள் தொடர்பான கவிதைப் பட்டியல் 212

4.24 கவிஞரின் ஆதங்கங்கள் தொடர்பான கவிதைப் பட்டியல் 232

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வரைப்பட பட்டியல்

எண் **பக்கம்**

3.1 ஆய்வுக் கட்டமைப்பு 51

3.2 கோட்பாடு வடிவமைப்பு 62

4.1 இந்தியர்கள் மலாயாவுக்குக் கொண்டு வரப்பட்ட முறை 76

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 1

அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.1 முன்னுரை

மலேசியத் தமிழ் இலக்கியம் ஒரு நூற்றாண்டைக் கடந்து, இரண்டாம் நூற்றாண்டில் தடம் பதித்துப் பீடுநடை போட்டு வருகின்றது. மலேசியத் தமிழ் இலக்கியம் ஏறக்குறைய 130 ஆண்டுகள் வரலாறுடையது என்றாலும், அதன் வேர்கள் பல காலத்திற்கு முன்பே ஊன்றப்பட்டது. மலேசியாவில், தமிழ் இலக்கியம் கணிசமான பங்கினை ஆற்றி வந்தது, வருகின்றது என்பது வரலாறு கூறும் நிதர்சனமான உண்மையாகும். மலேசியாவின் முதல் படைப்பிலக்கியமான 'ஆறுமுகப்பதிகம்' என்ற கவிதை, 1887ஆம் ஆண்டு உலக நேசன் இதழில் வெளியானது (முரசு நெடுமாறன், 1997:366). அதனைத் தொடர்ந்து சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம் மற்றும் கட்டுரை இலக்கியம் வளரத் தொடங்கின. அவ்வகையில் அடுத்துத் தோன்றிய ஓர் இலக்கிய அரும்புதான் புதுக்கவிதை. மலேசியாவில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1964இல் புதுக்கவிதை தொடக்கம் கண்டது. சி.கமலநாதனின் 'கள்ளப்பாட்டுகள்' என்ற தலைப்பிட்ட கவிதையே மலேசியாவின் முதல் புதுக்கவிதையாகும் (இளஞ்செல்வன். எம்.ஏ, 1988:27).

மலேசிய இந்தியர்களின் வரலாற்றுக்கு அடையாளம் கூறுவது அவர்களின் தோட்டப்புற வாழ்க்கைதான். மலேசிய நாட்டில் இந்தியர்களின் கலாச்சாரம், மொழி, சமயம் ஆகியவை தோட்டப்புற இந்தியர்களின் நிரந்தரமான வரலாற்று அடையாளமாகத் திகழ்கின்றது. தோட்டப்புறச் சூழலையும் வாழ்க்கையையும் மறக்காத பலர் இன்றும் இருக்கின்றார்கள். பல மலேசியத் தமிழ் எழுத்தாளர்களும் கவிஞர்களும் தோட்டப்புறப் பின்புலம் கொண்டவர்களே. இன்றைய மலேசியப் புதுக்கவிஞர்களுள் ஒருவரான கவிஞர் ந.பச்சைபாலனும் தோட்டப்புறத்தில் வாழ்ந்தவரே.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தோட்டப்புற வாழ்வை, இலக்கியத்தில் கொண்டு வரும் பல முயற்சிகள் மலேசிய நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. மலேசிய நாட்டில் அநேகமான தமிழ் எழுத்தாளர்களும் கவிஞர்களும் தோட்டப்புற வாழ்வைப்பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். பல்வேறு சிறுகதைகள், புதினங்கள் தோட்டப்புறச் சூழல்களைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. மலேசிய நாட்டைப் பொறுத்தவரையில் இங்கு வாழும் பெரும்பாலான இந்தியர்கள் தோட்டப்புறத்தையே பின்னணியாகக் கொண்டவர்கள். அவ்வகையில் இந்த இயல், ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் மலேசிய இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கை என்ற தலைப்பிற்குத் தேவையான அறிமுகத்தை வழங்குகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2 ஆய்வுப் பின்னணி

உலகின் எல்லா மொழி இலக்கியத்திலும் கவிதை இலக்கியமே முன்னோடி இலக்கிய வடிவமாக விளங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கிய வடிவமும் செய்யுள் வடிவமாகவே இருந்தது (தண்டாயுதம், இரா. 1980:23). மு.வரதராசன், தமது 'இலக்கிய திறன்' எனும் நூலில் இலக்கியத்தைக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

> *'ஒரு மரத்தைப் பார்த்து, இது நாற்பதடி உயரம் என்பது அறிவியல், இது வானளாவி உயர்ந்தது என்பது கலை. விண்ணை இடிக்கும் இமயம் என்றும் கூறுவர். விண் என்று ஒன்று கிடையாது என்றும் இமயமலை சிகரம் விண்ணை இடிப்பது இல்லை என்று அறிவது அறிவியல்; அதாவது உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உரைப்பது கலை. அறிவும் ஆராய்ச்சியும் அடிப்படையாக அமைவது அறிவியல். உணர்ச்சியும் கற்பனையுமாக அமைவது கலை. இக்கலை பலவகைப்படும். ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம் போன்றவை கலை.*
>
> (வரதராசன், மு. 2011:15)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun PustakaTBainun ptbupsi

மனிதன் படைத்துக் கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழி. மொழி இல்லையாயின் நாகரிக வளர்ச்சியே இல்லை எனலாம். ஆகவே, மனித வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடிப்படையான மொழி மிகச் சிறந்த நாகரிகக் கருவியாகும். அத்தகைய மொழியை, மொழியின் சொற்களை ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம். ஆகையால், அது கலைகளில் சிறந்தது என்பது பொருந்தும். இலக்கியம் முழுவதும் சொற்களால் ஆனது; சில கலைகள் அவ்வப்போது தோன்றிப் பயனளித்து மறையக் கூடியன. ஆனால், இலக்கியம் நெடுங்காலம் வாழக்கூடியது. அதனால்தான், பழம்பெரும் இலக்கியங்கள் இன்று வரை போற்றப்படுகின்றன (வரதராசன், மு. 2011:44).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது; என்று தோன்றி வளர்ந்தது என்று கூற முடியாத அளவுக்குப் பழமையானது; பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்குரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இயங்கியது. எனவே, தமிழில் காணக் கிடக்கும் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும் மக்கள் வாழ்க்கை நெறியின் செம்மையும் புலப்படுகின்றன (பாலசுப்பிரமணியம், சி. 2011:15).

இலக்கியம் என்பது ஒரு நுண்கலை. ஓவியமும் சிற்பமும் கட்புலனாகக் கூடியன; இசை செவிப்புலனாகக் கூடியது. அவற்றினும் நுட்பமாய்க் கருத்திற்கு மட்டுமே புலனாகக் கூடியது இலக்கியம். இத்தகைய நுண்ணியவற்றுள் எல்லாம் நுண்ணிதமான நுண்கலைக்கு வரலாறு எழுத முடியும் என்பது கடினமே. ஐம்புலன்களால் அறியக் கூடியவற்றை நம்மினும் பிரித்துத் தனித்து வைத்து நோக்க இடமிருக்கின்றது. அதனால், அவற்றின் வரலாற்றைத் தனித்து நோக்குதல் எளிதன்று. அதனால்தான், அதன் வரலாறு அதனைப் படைத்தவர்களோடும் நூல்களோடும் சேர்த்து வைத்தே நோக்கப்பட்டும் பின்னிப் பிணைத்தே எழுதப்பட்டும் வந்துள்ளது (தமிழண்ணல், 2014:19).

இலக்கியக் கற்றலானது ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறையை அறியப் பயன்படும். அதோடு, ஒரு காலக்கட்டத்தில் வாழும் மக்களின் பண்பாட்டைக் குறிக்கும் கருவியாகவும் அது திகழ்கின்றது. பெண் மற்றும் ஆண்களின் தன்மைகள், பிரச்சனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் இலக்கியம் இருக்கின்றது (Umar Junus, 1986:67).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியமானது வாழ்க்கை நெறிகளை உருவாக்கும் தன்மையுடையது. இலக்கியம் பல நற்பண்புகளைக் கொண்டுள்ளது. அவை இறை நம்பிக்கை, சமுதாயத் தொடர்பு, மனநிலை, சரித்திரம், அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், கல்விக் கோட்பாடுகள் போன்றவையாகும். இலக்கியத்தில் கூறவரும் கருத்துகள் அதனை வாசிக்கும் மக்களின் மனநிலைக்கும் சிந்தனையாற்றலுக்கும் ஏற்ப வேறுபட்டிருக்கும் (வையாபுரிப்பிள்ளை, 2012:32).

இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கு அம்சம் மட்டுமல்ல. இலக்கியம் மனிதனைச் செம்மைப்படுத்த வேண்டும்; பண்படுத்த வேண்டும். இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி, வாழ்க்கையின் விமர்சனம், வாழ்க்கையின் அனுபவக் கருவூலம் என்றெல்லாம் விளக்க முனைபவர் பலருண்டு. இலக்கியம் என்பது புனையா ஓவியம். இலக்கியம் என்பது எழுத்து வடிவத்தில் வெளிப்படும் கலை என்றும் கூறுவர் (பாலசந்திரன், சு. 1992:18).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியத்தின் உள்ளீடு பல வகையில் மாறுப்பட்டிருந்தாலும் அது நமக்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற கருத்து ஒன்று மட்டுமே. நம்முடைய உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் அது விளங்குகின்றது.

அவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய தமிழ்க் கவிதை இருபதாம் நூற்றாண்டிலும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் மலேசியத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தன் பங்கினை மிகச் சிறப்பாக ஆற்றியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கியம் மலேசிய நாட்டில் 1887ஆம் ஆண்டு தொடங்கியது. மலேசிய இலக்கியத் துறைகளான மரபு கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை முதலியவை வெளிவந்தன. அதனைத் தொடர்ந்து, புதுக்கவிதைகள் வெளிவந்தன. எழுத்தாளரும் கவிஞருமான எம்.ஏ.இளஞ்செல்வன் இயற்றிய 'நெருப்புப் பூக்கள்' 1979ஆம் ஆண்டு வெளியீடு கண்ட முதல் புதுக்கவிதைத் தொகுப்பு நூல் ஆகும் (இராஜம், 2007:63).

புதுக்கவிதை மலேசியாவில் மிக விரைவாக வளர்வதற்குக் காரணம் அதன் இலகுவான மற்றும் இலக்கணத்திற்கு உட்படாத வடிவமாகும். மரபு கவிதை போல் புதுக்கவிதை இலக்கணத்திற்குக் கட்டுப்படத் தேவையில்லை. அது மட்டுமல்லாமல், யாப்பிலக்கணத்தை முறையாகக் கற்றுக் கொள்ள முடியாத சூழலும் மரபின் இருண்மைப் போக்கும் புதுக்கவிதை வளர்வதற்குக் காரணமாக இருந்தது (இராஜம், 2007:63).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

புதுக்கவிதை வடிவத்தைப் பின்பற்றிய முதல் தலைமுறைக் கவிஞர்களான எம்.ஏ.இளஞ்செல்வன், ஆதி.குமணன், சி.கமலநாதன், பைரோஜி நாராயணன், எம்.துரைராஜ், இராஜகுமாரன், அக்கினி, முரசு நெடுமாறன், கரு. வேலுசாமி, ஐ. உலகநாதன், மைடின் சுல்தான், கரு. திருவரசு, பொன்முடி, மணிதாசன் போன்றோரைத் தொடர்ந்து பல இளங்கவிஞர்கள் இந்தத் துறையில் புதுக்கவிதை எழுத முனைந்தார்கள் (இராஜம், 2007:65). அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் இன்றைக்கும் பேசப்படும் புதுக்கவிதைகளைத் தந்து கொண்டிருப்பவரும் இத்துறையில் மிகத் நுட்பமாகவும் ஆழமாகவும் புதுக்கவிதை எழுதுபவர் கவிஞர் ந.பச்சைபாலன் ஆவார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கவிஞர் ந.பச்சைபாலனின் புதுக்கவிதைகளின் கருப்பொருள் பெரும்பாலும் தோட்டப்புற மக்களின் வாழ்க்கைமுறை, தோட்டப்புறத்தின் சூழல், தமிழ்க் கல்விச் சாலைகளின் அவலங்கள், தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், முற்போக்குச் சிந்தனையின்மை, தோட்டப்புற மக்களின் அலட்சியப் போக்கு, மொழிப்பற்றின்மை போன்றவற்றைத் தன் புதுக்கவிதைகள் வழி பகிர்ந்துள்ளார். ஆகவே, இவ்வாய்வு தோட்டப்புற மக்களின் வாழ்க்கை நிலையையும் பிரச்சனைகளையும் கண்டறிய வழி வகுக்கின்றது.

1.3 படைப்பாளர் அறிமுகம்

மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் குறுகிய காலத்தில் தோன்றி மறைந்த எழுத்தாளர்களே மிகுதி. இருப்பினும், ஒரு சிலரே இத்துறையில் தொடர்ந்து எழுதி வருகின்றனர். அவ்வகையில், கவிஞர் ந.பச்சைபாலனைக் குறிப்பிடலாம். மலேசிய நாட்டில் பெரும்பாலான எழுத்தாளர்கள் குறிப்பிட்ட ஏதாவதொரு இலக்கிய வடிவில் அதாவது கவிதை அல்லது உரைநடை இலக்கியங்களில் மட்டுமே தங்கள் கவனத்தைச் செலுத்துவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வெகுசிலரே கவிதை, உரைநடை ஆகிய இரு இலக்கியத் துறைகளிலும் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு ஈடுபட்டவர்கள் அனைவரும் அவ்விரண்டு துறைகளிலும் சிறப்புற்று விளங்கியதில்லை. அதற்கு விதிவிலக்கான ஒருவரே கவிஞர் ந.பச்சைபாலன். இவர் புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை, சிறுகதை, நாடகம், திறனாய்வு என்று பல்வேறு துறைகளில் ஈடுபட்டு அவற்றில் தொடர்ந்து தம்மை வளர்த்துக் கொண்டும் வருகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ந.பச்சைபாலன் என்ற புனைபெயரில் மலேசியத் தமிழ் இலக்கிய உலகிற்கு நன்கு அறிமுகமான ந.பாலகிருஷ்ணன் 21 மே 1960இல் சிலாங்கூர் மாநிலத்தின் இரவாங், சுங்கை சோ தோட்டத்தில் பிறந்தவர். தன் அண்ணன் பச்சையப்பன் நினைவாக ந.பச்சைபாலன் எனத் தம் பெயரை மாற்றிக்கொண்டார். 16 வயது முதல் ஏடுகளுக்கு எழுதும் முயற்சி தொடங்கியது. இவர் அண்ணன், மறைந்த எழுத்தாளர் ந.பச்சையப்பனின் தூண்டுதலால் சிறுகதை, கட்டுரை போன்றவற்றை எழுதும் ஆர்வம் ஏற்பட்டது (நேர்காணல்: பதில் 1).

முதல் சிறுகதையான 'மனப்போராட்டம்' தமிழ்நேசனில் 1978ஆம் ஆண்டு வெளிவந்தது. 1978ஆம் ஆண்டில், கவிதை எழுதும் எண்ணம் தோன்றியது. எழுத்தாளர் ஆதி. குமணனின் 'வானம்பாடி' வார இதழின் வரவு, இவரின் கவிதை உணர்வுகளை எழுப்பிவிட்டது. இதனால், புதுக்கவிதைகளை மிகுந்த ஈடுபாட்டோடு எழுதத் தொடங்கினார். ஏடுகளில் இவர் எழுதிய கவிதைத் தொடர்கள் *'என் எழுதுகோலே நெம்புகோலாக', 'என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்', 'திசைகள் தொலைத்த வெளி', 'கை நிறைய கனவுகள்', 'இன்னும் மிச்சமிருக்கிறது'* ஆகும். இவர் இதுவரை 3 கவிதைத் தொகுப்புகளை வெளியீடு செய்துள்ளார். அவை *'எனது கவிதைகளும் கொஞ்சம் கனவுகளும்', 'இன்னும் மிச்சமிருக்கிறது'* மற்றும் *'திசைகள் தொலைத்த வெளி'* ஆகும் (நேர்காணல்: பதில் 2)

மேலும், இவர் இதுவரை எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை *'மௌனம் கலைகிறேன்'* (சிறுகதைகள், 1986), *'என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்'* (கவிதைகள், 2009), *'இலட்சியப் பயணத்தில் ஹைக்கூ பாடகன்'* (பயணக்கட்டுரை, 2009), மாணவருக்கு மூன்று இலக்கிய வழிகாட்டி நூல்கள் (2006,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2013), ***'திசைகள் தொலைத்த வெளி'*** (கவிதைகள், 2013), ***'இன்னும் மிச்சமிருக்கிறது'*** (கவிதைகள், 2014) ஆகும் (நேர்காணல்: பதில் 4).

2014ஆம் ஆண்டு ***'திசைகள் தொலைத்த வெளி'*** என்ற கவிதை நூலுக்காகத் தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் "கரிகாற்சோழன்" என்ற விருதை வென்றுள்ளார். அது மட்டுமல்லாமல், 'டேவான் பகாசா டான் புஸ்தாகா' மொழி வளர்ச்சி மையம் வெளியிட்ட *'Voices of Malaysian Poets'* கவிதைத் தொகுப்பு நூலில் இவரின் மூன்று கவிதைகள் (ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு) இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து, அவ்வப்போது திறனாய்வுக் கட்டுரைகளையும் படைத்து வருகிறார். மலேசியா, சிங்கை, தமிழகம், இலங்கை ஆகிய இடங்களில் நடைபெற்ற இலக்கியக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் படைத்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அது மட்டுமல்லாமல், கவிக்கோ அப்துல் ரகுமானின் ஹைக்கூ கட்டுரையால் ஈர்க்கப்பட்டு, 'ஜப்பானிய ஹைக்கூ கவிதை' வடிவத்தை 1990களில் மலேசியாவில் அறிமுகப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஹைக்கூ இலக்கியத்தைப் பற்றி இவர் பல்கலைக்கழக அளவிலான ஆய்வினை மேற்கொண்டு நன்கு அறிந்து வைத்துள்ளார். ஹைக்கூ பற்றிய விளக்கக் கட்டுரைகளையும் கவிதைகளையும் தொடர்ந்து ஏடுகளில் எழுதி அது குறித்துத் தெளிவை ஏற்படுத்தியவர். இதுவரை இவர் எழுதியுள்ள ஹைக்கூ தொடர்கள்: ***'ஹைக்கூ நதிக்கரையோரம்'*** (கவிதைகள்), ***'தமிழ் ஈழம் 200'*** (கவிதைகள்), ***'இன்னும் கொஞ்சம் ஹைக்கூ'*** (கட்டுரைகள்).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தற்போது இடைநிலைப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரியும் இவர், படிவம் ஐந்து மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியத் தேர்வு வழிகாட்டிப் பயிலரங்குகளை நடத்தி வருகிறார். மேலும், தமிழ் ஏடுகளில் ஒவ்வொரு வாரமும் படிவம் ஐந்து மாணவர்களுக்கு இலக்கியப் பாட விளக்கங்களையும் எழுதி வருகின்றார்.

புதுக்கவிதை திறந்து வைத்த மகத்தான வாசல்களை முழுவதும் பயன்படுத்தியவர்களில் கவிஞர் ந.பச்சைபாலனும் ஒருவர். தன் உருவங்களும் படிமங்களும் உடனே எளிமையாக மக்களை அடையுமாறும் புரிந்துகொள்ள கூடிய வகையிலும் புதுக்கவிதைப் எழுதுவதில் வல்லவரும் ஆவார்.

எழுதுகோல் ஏந்தும் ஒவ்வொரு பொழுதும், இந்திய சமூகத்தின் ஆக்கத்திற்கு ஏதேனும் முன்மொழிய முடியுமா என்கிற நோக்கத்தோடுதான் எழுதுகின்றார். எழுதுகோல்; மற்றவர்களுக்கு அளவுகோலாய், செங்கோலாய், கன்னக்கோலாய், தூண்டுகோலாய், வெறுங்கோலாய் இருக்கலாம். ஆனால், கவிஞரோ தனக்கு எழுதுகோல்; நெம்புகோல் என்கிறார். (நேர்காணல்: பதில் 18)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமூகத்தின் மீதுள்ள அக்கரையும் அந்தச் சமூகத்தின் பொருந்தாத நடப்புகளின் மீது துணிச்சலான கோபமும் அதனை எழுத்தில் வெளிப்படுத்தித் தட்டிக் கேட்க வேண்டும் என்ற ஆவேசத் துடிப்பும் தாபமும் உடையவனே நல்ல எழுத்தாளனாகிறான். இத்தகைய நிலையை இக்கவிஞரிடம் காண முடிகின்றது. சமூகச் சிறுமைகளையும் புன்மைகளையும் கண்டு பொங்குகிறார். சமூகப் பிரச்சனைகளை வெளிச்சமிட்டுக் காட்டுவதில் முன்னிற்கின்றார். தம் தேவைக்கும் கருத்துக்கும் ஏற்பத் தமிழைத் திட்பமாகவும் நுட்பமாகவும் பயன்படுத்திப் பயன்தரும் படைப்புகளைத் தருவதில் வல்லவர் இவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியத்தின் அரசியாகக் கருதப்படுவது கவிதையே. கவிதை என்பது வாழ்க்கையைச் சொல்வது; வாழ்ந்ததைச் சொல்வது மட்டுமல்ல; வாழ நினைப்பதையும் சொல்வது. அந்தக் கவிதை இலக்கியத்தின் நோக்கையும் போக்கையும் இவர் நன்கறிந்துள்ளார். கவிதை எப்பொழுது தோன்றும்; எப்பொழுது குரல் கொடுக்க வேண்டும் என்பதையும் விளக்குகிறார்.

தோட்டப்புறத்தில் வாழ்ந்த அனுபவத்தினால் ந.பச்சைபாலன் எழுதிய நிறைய புதுக்கவிதைகள் தோட்டபுறத்தைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. தோட்டப்புறத்தின் தோற்றம், செம்மண்சாலைகள், பால்மரம், வீடுகள், கோவில், பள்ளிக்கூடம், தோட்டத்துப் பெண்கள், தோட்டத்துப் பண்பாடு போன்றவற்றை அனுபவத்தோடும் உயிரோட்டத்தோடும் படைத்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.4 ஆய்வுச் சிக்கல்

ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் மலேசிய இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கை என்ற தலைப்பிலான ஆய்வு மிக முக்கியமானதாகும். இவ்வாய்வில், கவிஞர் மலேசிய இந்தியர்கள் தோட்டப்புறங்களில் எவ்வாறான வாழ்க்கை வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்? எம்மாதிரியான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர்? என்பதனைத் தன்னுடைய புதுக்கவிதைகளின் வழி மிக அழகாக, நுணுக்கமாக, தெளிவாகப் படைத்துள்ளார்.

இந்தியர்கள் மலேசியாவில் 2 நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்கின்றனர். 1860ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை 4 மில்லியன் இந்தியர்கள் மலாயாவுக்கு வந்துள்ளனர். இதில் 2.8 மில்லியன் பேர் மீண்டும் இந்தியாவுக்கே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திரும்பிச் சென்றுள்ளனர். மீதம் உள்ள 1.2 மில்லியன் இந்தியர்களில் பெரும்பாலோர் நோய்களாலும் பாம்புக்கடிகளாலும் போதிய சத்துணவு இல்லாததாலும் இறந்துள்ளனர் (1957ஆம் ஆண்டு கூட்டரசு மலாயாவின் அதிகாரபூர்வ அறிக்கை). இதில் மிஞ்சியவர்களே இன்று வாழும் மலேசிய இந்திய முன்னோர்களின் சந்ததியினர்.

மலேசிய நாட்டில் இந்தியர்கள் நீண்டதொரு வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டிருப்பவர்கள். இப்பயணத்தில் இவர்கள் தலைமுறை தலைமுறையாக உண்மையான விசுவாசத்தையும் உழைப்பையும் மலேசிய நாட்டின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அர்பணித்துள்ளனர். ஆகவே, கவிஞரின் பல கவிதைகள் தோட்டப்புறச் சூழலையே சார்ந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் மலாயாவில் ஆங்கிலேயர்களின் காலனித்துவ ஆட்சியின் போது தென்னிந்தியாவிலிருந்து மலாயாவிற்குக் கூலி வேலைகள் செய்வதற்கு இந்தியர்கள் சஞ்சிக்கூலிகளாகக் கங்காணிகளால் கொண்டு வரப்பட்டனர். கங்காணிகளின் பசப்பு மொழிகளாலும் இனிய வார்த்தைகளாலும் ஏமாற்றப்பட்டு, ஏமாந்து மலாயாவில் குடியேறிய தோட்டத் தொழிலாளிகள்பட்ட அவலங்களும் கஷ்டங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. மலேசிய நாட்டின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் மலேசிய இந்தியர்கள் குறிப்பாகத் தோட்டப்புறத் தொழிலாளர்கள் முதுகெலும்பாய் விளங்கி வந்திருக்கின்றார்கள் என்பது காலத்தாலும் மறைக்கவும் மறுக்கவும் முடியாத உண்மையாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தோட்டப்புற இந்தியர்களின் வாழ்வு என்பது மிகக் குறைந்தபட்ச வசதிகள் கொண்ட வாழ்க்கையாகவே கடந்த பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றது. பெரிய நிறுவனங்களின் ஒரு சில தோட்டங்கள் மட்டுமே விசாலமான வீடுகள், நீர், மின்சாரம், ஆயாக்கொட்டகை, பாலர்பள்ளி, மருந்தகம் போன்றவை வசதிகள் வழங்கியுள்ளன. ஆனால், பெரும்பாலான தோட்டங்கள் குறைந்த வசதிகளை மட்டுமே தொழிலாளர்களுக்கு வழங்கின.

பொதுவாகவே, பொருளாதார அடிப்படையில் இந்தியர்கள் இன்னும் மற்ற இனத்தைவிட முன்னேராமலேயே இருக்கின்றனர். அவ்வகையில், தோட்டப்புறத்தில் வாழும் இந்தியர்களின் பொருளாதார நிலை இன்னும் மோசமாக உள்ளது. ஏழ்மை நிலை ஒரு நாட்டில் முக்கிய விவகாரமாகும். எனினும், மலேசியாவைப் பொருத்தவரையில் ஏழ்மை நிலை குறைக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் மலேசிய மக்கள் சிலர் இன்னமும் ஏழ்மை நிலையில் இருக்கின்றனர். இந்தியர்கள் ஏழ்மை நிலையிலும் வறுமையிலும் உழன்று வருகின்றனர்.

இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கையானது உரிமையை எண்ணிப் பார்க்காமல் உழைக்க மட்டுமே தெரிந்த உழைப்பாளிகளாகவும் பல பிரச்சனைகளையும் வறுமையையும் உடமைகளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். தோட்டப்புற இந்தியர்கள் சமூகவியல், பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் எப்படியெல்லாம் போராட்டம் நடத்தி வருகின்றனர் என்பதை மிக துல்லிதமாகவும் உயிரோட்டமாகவும் தமது புதுக்கவிதையின் வழி கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.5 ஆய்வு நோக்கம்

1. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் வெளிப்படும் தோட்டப்புற இந்தியர்களின் வாழ்க்கை முறைகளை அடையாளங் காணுதல்.
2. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் தோட்டப்புற இந்தியர்களின் அவலநிலைக்குக் காரணமானவர்களைச் சாடுவதற்கான காரணங்களை விளக்குதல்.
3. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் காணப்படும் பாத்திரப்படைப்புகள் வழி தோட்டப்புற இந்தியர்கள் எத்தகைய வாழ்வியல் முறைகளைக் கொண்டுள்ளனர்.

1.6 ஆய்வு வினா

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் வெளிப்படும் தோட்டப்புற இந்தியர்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு அமைந்துள்ளது?
2. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் தோட்டப்புற இந்தியர்களின் அவலநிலைக்குக் காரணமானவர்களைச் சாடுவதற்கான காரணங்கள் யாவை?
3. ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் காணப்படும் பாத்திரப்படைப்புகள் வழி தோட்டப்புற இந்தியர்கள் எத்தகைய வாழ்வியலைக் கொண்டுள்ளனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.7 ஆய்வு நன்மை

‘ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் மலேசிய இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கை’ எனும் ஆய்வு மிக முக்கியமானதாகும். இது, இனி வரும் ஆய்வாளர்களுக்கு இந்தியச் சமுதாயம் மலேசிய நாட்டில் தலை நிமிர்ந்து பீடுநடை போட வேண்டும் என்ற வேட்கையை உருவாக்கும். ஆய்வாளர், ந.பச்சைபாலனின் புதுக்கவிதைகளை முக்கியமானதாகக் கருதுகின்றார். ஏனெனில், கவிஞர் இந்தியச் சமூகத்தின் மீது நம்பிக்கையும் அந்தச் சமூகத்தின் பொருந்தாத நடப்புகளின் மீது துணிச்சலான கோபத்தையும் சாடல்களையும் எழுத்தில் வெளிப்படுத்தித் தட்டிக் கேட்க வேண்டும் என்ற ஆவேசத் துடிப்பும் தாபமும் உடையவராக இருக்கிறார்.

இவ்வாய்வின் நோக்கம் யாதெனில், இந்தியர்கள் அக்காலம் தொட்டு இக்காலம் வரை எவ்வாறெல்லாம் துன்பமும் அவலமும் கண்டு வருகின்றனர் என்பதை எடுத்துரைக்க ஆகும். இன்றைய இந்திய இளைஞர்கள் தங்களுடைய முன்னோர்கள் அனுபவித்த கஷ்டங்களையும் அவர்கள் பின்பற்றிய கலை கலாச்சாரத்தையும் மறந்து இன்றைய நாகரீக மோகத்தில் மூழ்கியுள்ளனர். தங்களுடைய பண்பாடு, சமயம், நம்பிக்கை, பாரம்பரிய உணவு, பாரம்பரிய உடையை மறந்து எதிர்கால சந்ததியர்களுக்கு தாம் இந்தியர்கள் என்ற உணர்வுகள் இருக்குமா இல்லையா என்று தெரியாத அளவிற்குப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

அது மட்டுமல்லாமல், மலேசிய இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கையில் அவர்கள் அனுபவித்த கஷ்டங்களையும் வேதனைகளையும் தொகுப்பாகச் செய்வதன் வழி, இது ஓர் ஆய்வாகவும் வழிகாட்டியாகவும் அமையும். வரலாற்று

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உண்மைகளின் மூலம் தோட்டப்புற இந்தியர்களும் முன்னோர்களும் மலேசிய நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர் என்று தெரிந்து கொள்ளலாம்.

1.8 ஆய்வு எல்லை

இந்த ஆய்வுக்காகக் கவிஞர் ந.பச்சைபாலனின் மூன்று புதுக்கவிதைத் தொகுப்புகள் பயன்படுத்தப்பட்டன. அவை ***'என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்'*** (2009), ***'திசைகள் தொலைத்த வெளி'*** (2013) *மற்றும்* ***'இன்னும் மிச்சமிருக்கிறது'*** (2014) ஆகும்.

'என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்' என்ற கவிதைத் தொகுப்பு நூலில் மொத்தம் 25 புதுக்கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அதில் தோட்டப்புறத்தைப் பற்றிய கவிதைகள் மொத்தம் 10 ஆகும். ***'திசைகள் தொலைத்த வெளி'*** என்ற கவிதைத் தொகுப்பு நூலில் மொத்தம் 100 புதுக்கவிதைகள் உள்ளன. அவற்றில் 15 கவிதைகள் தோட்டப்புற சூழலைக் கொண்டு எழுதப்பட்டது. ***'இன்னும் மிச்சமிருக்கிறது'*** என்ற கவிதைத் தொகுப்பு நூலில் மொத்தம் 141 புதுக்கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. அதில் மொத்தம் 50 கவிதைகள் தோட்டப்புறத்தையும் தோட்டப்புற மக்களின் வாழ்வியலையும் பறைசாற்றுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9 ஆய்வு சான்றாதாரங்கள்

இவ்வாய்வினை மேற்கொள்ளும் போது ஆய்வாளர் பல சான்றாதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இந்த ஆய்வுக்காக, நேரடியாகப் பயன்படுத்தப்பட்ட மூலங்கள் யாவும் முதன்மைச் சான்றாதாரங்கள் ஆகும். ஆய்வுக்குத் துணைச் செய்யும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வகையில் பயன்படுத்தப்பட்ட மூலங்கள் யாவும் துணைமைச் சான்றாதாரங்கள் எனப்படும்.

1.9.1. முதன்மைச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்கு முதன்மைச் சான்றாதாரங்களாகக் கவிஞரின் மூன்று புதுக்கவிதைத் தொகுப்புகள் அமைந்துள்ளன. அவை, *'என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்', 'திசைகள் தொலைத்த வெளி' மற்றும் 'இன்னும் மிச்சமிருக்கிறது'* ஆகும்.

1.9.2 துணைமைச் சான்றாதாரம்

ஆய்வாளர் தனது ஆய்விற்குத் துணைமைச் சான்றாதாரங்களாகப் பல நூல்களைப் பயன்படுத்தியுள்ளார். இளங்கலை, முதுகலை, முனைவர்ப் பட்ட ஆய்வேடுகள், ஆய்விதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

1.10 கலைச்சொல் விளக்கம்

ஆய்வின் தலைப்பானது 'ந.பச்சைபாலன் புதுக்கவிதைகளில் மலேசிய இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கை' ஆகும். இத்தலைப்பில் முக்கியக் கலைச்சொற்களாகப் புதுக்கவிதை, மலேசிய இந்தியர்கள் மற்றும் தோட்டப்புறம் போன்றவற்றை ஆய்வாளர் தேர்ந்தெடுத்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.10.1 புதுக்கவிதை

கவிதை என்பது கவிஞனின் உள்ளத்து உணர்வுகளையும் எண்ணங்களையும் மெய்ப்பட படைப்பதாகும். ஒரு கவிஞனானவன், அவனின் உயர்ந்த கற்பனைத் திறத்தால் ஒரு படைப்பை உலகுக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பவனாவான். ஒருவர் சொல்ல வரும் கருத்தினை அல்லது மனதில் எழும் உணர்வுகளைச் சுற்றி வளைக்காமல் நேரடியாக அனைவருக்கும் விளங்கும் வகையில் சொல்லும் போக்காகும். புதுக்கவிதை, சொல்ல வரும் கருத்துகளை அழகாக, ஆழமாக, அழுத்தமாக, உள்ளத்தில் புகும் வண்ணம் உணர்த்துகிறது; நேரே நெஞ்சில் நிலை கொள்வது.

இப்புதுக்கவிதைகள் பெரும்பாலும் மக்களைப் பார்த்துப் பேசும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளன. கவிதைக் குறித்துச் சிந்தனைகள் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்குத் தீவிரப்பட்டன. உலக இலக்கிய அரங்கில் புதுக்கவிதையின் தோற்றம் தொழில் புரட்சியையும் அறிவியல் வளர்ச்சியையும் பின்னணியாகக் கொண்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கிய வளர்ச்சியும் அதனோடு கூடிய தேவையும் புதுக்கவிதைக்கு வித்திட்டது. ஆங்கிலத்தில் *New Poetry, Modern Poetry* என அழைக்கப்பட்ட கவிதை வடிவம் தமிழுக்கே உரிய மரபில் புதுக்கவிதையாகத் திகழ்கிறது. இத்தனை அடிகள்தான் எழுதப்பட வேண்டும் என்ற வரையறை இல்லை. ஒவ்வொரு அடியிலும் குறிப்பிட்ட சீர்கள் இருக்க வேண்டுமென்ற வரையறை இல்லை. சொற்சுருக்கம் இருக்க வேண்டியது புதுக்கவிதைக்கான முக்கிய அம்சம். பேச்சு வழக்குச் சொற்களிடையே ஒலிநயம் காணப்படுவது பொதுவானது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சொற்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதும் வடமொழி, ஆங்கிலம், பேச்சு வழக்குச் சார்ந்த சொற்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. அடிவரையறை செய்து எழுதும் போது மரபு கவிதை போன்று தோற்றமளிக்கும். வசன நடையும் உரையாடல் பாங்கும் சிறப்பாக எளிய முறையில் பயன்படுத்தப்படும்.

1.10.2 மலேசிய இந்தியர்கள்

மலேசிய நாட்டின் முன்னேற்றத்திலும் மேம்பாட்டிலும் இந்தியர்களின் பங்கு மிகவும் அளப்பரியது. இந்தியர்களின் உழைப்பு, அவர்களின் வேர்வை, சிந்திய இரத்தம் ஆகியவை மலேசியாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தன என்பதில் ஐயமில்லை. “இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அனைவரிலும் தென்னிந்தியத் தொழிலாளிகள் மிகவும் சிறந்த வேலைக்காரர்களாக ஆங்கிலேயர்களால் கருதப்பட்டனர். குறிப்பாக எளிய, சுலபமான, திரும்பத் திரும்பச் செய்யக் கூடிய வேலைகளுக்கு உகந்தவராகக் கருதப்பட்டனர். வளைந்து கொடுக்கக் கூடியவர்கள்; மேலாளர்களுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்வார்கள்; அவர்களை எளிதாகக் கண்காணிக்க முடியும்; வட இந்தியர்களைப் போல அவர்களுக்கு வாழ்க்கை இலட்சியங்கள் கிடையாது; நிச்சயமாகச் சீனர்களுக்கு அவர்கள் நிகரில்லை. குறைந்தச் சம்பளத்தில் தோட்டங்களிலும் அரசாங்கத் துறைகளிலும் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு இசைந்து வருபவர்கள் அவர்களேயாகும்” என்று 1833ஆம் ஆண்டு மலாயாவில், பினாங்கில் வேலை செய்ய வந்த மலேசிய இந்தியர்களின் முன்னோடிகளான இந்தியத் தொழிலாளிகளை மிகவும் கேவலப்படுத்தும் முறையில் ‘மலேசியாவில் இந்தியர்கள்’ என்னும் நூலில் கே.எஸ் சந்து (1969) வருணித்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1786ஆம் ஆண்டு பினாங்குத் தீவு ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்த பின்பே இந்தியர்களின் குடியேற்றங்கள் மலாயாவில் (மலேசியா) ஏற்பட்டுள்ளது. எனினும், 1833ஆம் ஆண்டுக்குப் பின்னரே அதிக அளவில் இந்தியர்கள், தமிழர்களின் குடியேற்றம் நிகழ்ந்துள்ளது. அதற்கு முன்பும் தமிழர்களின் வருகை இருந்திருக்கிறது. வியாபார நோக்கில் வந்த அவர்களின் வருகை பின்பு பண்பாட்டுத் தொடர்பாய் மாறி பின்னர் அரசியல் தொடர்பாக மாறியுள்ளது. தென்கிழக்காசிய நாடுகளில் தென்னவர்களின் ஆதிக்கம் நெடுங்காலம் நிலைத்து இருந்தற்குரிய சான்றுகள் சமயக் கோட்பாடுகளாய், வழிபாட்டு உருவங்களாய், சிற்பங்களாய், கட்டடங்களாய் மலாயாவில் பதிந்தன (அரசரத்தினம், 1994:15).

தமிழர்கள் மலாயாவுக்கு வந்ததற்கும், புலம்பெயர்வுக்கும் மற்றும் கொண்டு வரப்பட்டதற்கும் மிக முக்கியக் காரணம் தமிழகத்தில் நிலவிய வறுமையும், நிலக்கிழார்களிடம் அகப்பட்டுத் துடித்த கொத்தடிமை நிலையும் மற்றும் சாதி ஒடுக்குமுறையும் ஆகும். அதோடு ஆங்கிலேயர்கள் இந்தியர்களைக் கவர சொல்லிய பொய்களாளும் 2 நூற்றாண்டுகளுக்கு முன், சஞ்சிக்கூலிகளாக இம்மலையகத்திற்கு வந்தவர்கள் இந்தியர்கள்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.10.3 தோட்டப்புறம்

இரப்பர், செம்பனை, தென்னை, கரும்பு, கொக்கோ, காப்பி, தேயிலை போன்ற மூலத்தொழில்களைப் பெற்றிருக்கும் அல்லது நடப்பட்டிருக்கும் இடங்கள் தோட்டம் அல்லது தோட்டப்புறம் எனக் கூறப்படுகிறது. தொடக்கத்தில் காடுகளை அழித்துக் காப்பி, கரும்பு, கொக்கோ போன்ற பயிர்கள் நடப்பட்டன. பிறகு, இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சி காரணமாகப் இரப்பர் கொண்டு வரப்பட்டது. காடுகளை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அழித்துப் பல ஆயிரம் ஏக்கர்களில் இரப்பர் மரங்கள் நடப்பட்டன. இரப்பர், செம்பனை, தென்னை, கரும்பு, கொக்கோ, காப்பி, தேயிலை போன்ற மூலத் தொழில்களைப் பெற்றிருக்கும் தோட்டப்புறங்களின் தொழிலாளர்கள் இந்தியர்கள். தோட்டத் தொழில் தொடங்கப்பட்ட காலந்தொட்டே இந்தியர்கள் நிரந்தமாகத் தோட்டங்களில் வாழ்கின்றனர். தோட்டப்புற வாழ்க்கை என்பது அங்கு வாழும் மக்கள் குறைந்த ஊதியத்தைப் பெறுவதுடன் அடிப்படை வசதிகளைப் பெறுவதிலும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றனர்: வாழ்கின்றனர்.

1.11 தொகுப்புரை

இந்த ஆய்வானது ந. பச்சைபாலன் புதுக்கவிதைகளில் இடம்பெற்றுள்ள மலேசிய இந்தியர்களின் தோட்டப்புற வாழ்க்கை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வுத் தொடர்பான தகவல்கள் இப்பகுதியில் தெளிவாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்குரிய ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நன்மைகள், ஆய்வு நோக்கம், ஆய்வு வினாக்கள், ஆய்வு எல்லை, ஆய்வு மூலம், முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம் ஆகியவைக் கொடுக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi